A HAND BOOK OF

# MENTAL ABILITY TESTS

## FOR TALENT AND COMPETITIVE EXAMS

## திறனறி மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான மனத்திறன் தேர்வு - வழிகாட்டி நூல்


Wtitten by

S.MOHAN M.Sc., B.Ed., M.Phil.,DISM.,

N.SASIKALA MOHAN M.Sc., B.Ed., M.Phil.,

PUMS,ATHEMCHERY,KADALADI UNION,

RAMANATHAPURAM DISTRICT.

புத்தகம் பற்றிய கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

**e-mail ID:** mohansasi10@gmail.com / wtsteam100@gmail.com **Cell No.9715160005**

தயவுசெய்து புத்தகம் வாங்க மேற்கண்ட எண்ணை தொடர்பு கொள்ள வேண்டாம். அதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள பதிப்பகத்தின் எண்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.



Published by

**WAY TO SUCCESS PUBLICATIONS**

**Plot No.24, Ramamoorthi Nagar, Old Karur Road**

**Melachinthamani, Trichy – 620 002**

**Contact No. 9787609090, 9787201010, 0431-2703031**

| | | |
|---|---|---|
| Title | : | **A Hand Book of Mental Ability Tests for Talent and Competitive Exams** |
| First edition | : | September - 2017 |
| Second edition | : | September - 2019 |
| Authors | : | **S. Mohan & N. Sasikala Mohan** |
| Language | : | Tamil |
| No. of Pages | : | 615 |
| Size | : | A4 |
| Publishers | : | **WAY TO SUCCESS PUBLICATIONS**<br>**Plot No.24, Ramamoorthi Nagar, Old Karur Road**<br>**Melachinthamani, Trichy – 620 002**<br>**Contact No. 9787609090, 9787201010, 0431-2703031** |
| Copyright | : | **S. Mohan & N. Sasikala Mohan** |

No Part of this book may be reproduced or transmitted in any form or by any means electronically or mechanically including photo copying or recording or by any information storage and retrieval system without permission from the Authors.

M.R.P.Rs : Rs.270 ( Rupees Two Hundred and Seventy Only )

**For queries please Contact:**

| | |
|---|---|
| **Cell No.** | **: 97 87 60 90 90** |
| | **: 97 87 20 10 10** |
| **Mail.id** | **:** wtsteam100@gmail.com |
| **Website** | **: www.waytosuccess.org** |

## போட்டித் தேர்வுகள் (Competitive Exams)
## ஓர் அறிமுகம் ...

போட்டித்தேர்வு என்பது ஒரு தேர்வின் மூலம், நபர்களை தரவாரியாக வகைப்படுத்துதலே ஆகும். தர வாரியாக முதன்மை பெற்றவர்கள், அத்தேர்வில் வெற்றி பெற்றவர்களாக கருதப்படுகின்றார்கள்.

**போட்டித் தேர்வுகளின் தேவை :**

இந்தியா போன்ற மக்கள் தொகை மிகுந்த நாடுகளில், படித்த நபர்கள் எண்ணிக்கையில் மிக அதிக அளவில் இருக்கின்றனர். அவர்களில் இருந்து மிகத்திறமையான, கூர்சிந்தனையுள்ள, தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுக்க போட்டித்தேர்வுகள் இன்றியமையாத ஒன்றாக மாறிவிடுகின்றது .மேலும் உயர்கல்வி பயில தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுக்கவும், மாணாக்கர்கள் உதவித்தொகை பெறுவதற்கும், பள்ளி,கல்லூரி , பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கும், கல்லூரி பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் தங்களின் பணிக்கான தகுதியை நிலைநிறுத்தவும், அரசுப்பணி ( மாநில / மத்திய) மற்றும் தனியார் துறைகளில் பணிக்கு நபர்களை தேர்வு செய்யவும் போட்டித்தேர்வுகள் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது.

**வகுப்புத் தேர்வுகள் VS போட்டித்தேர்வுகள் :**

| வகுப்புத் தேர்வுகள் | போட்டித்தேர்வுகள் |
|---|---|
| வினாக்கள் பாடப்பொருளில் பெற்றுள்ள திறன்களை மட்டுமே சோதித்து அறியும் வகையில் இருக்கும். | பாடப்பொருள், பொது அறிவு, கூர்சிந்தனைத்திறன், எண்ணியல் திறன், பிரச்சனைக்கு தீர்வு காணும் திறன், புரிந்து கொள்ளும் திறன் etc., போன்றவற்றை சோதித்து அறியும் வகையில் அமைந்திருக்கும். |
| வினாக்களின் கடினத்தன்மை சற்று குறைவாக இருக்கும். | வினாக்களின் கடினத்தன்மை அதிக அளவில் இருக்கும். |
| வினாக்களுக்குரிய விடையை கண்டறிந்து எழுத போதுமான கால அவகாசம் கிடைக்கும்.<br>எதிர்மதிப்பெண்கள் கிடையாது. | குறைந்த கால அவகாசமே கிடைக்கும்.<br>சில தேர்வுகளில் எதிர்மதிப்பெண் உண்டு. (UPSC) |
| பலவுள் தெரிவு, கோடிட்ட இடத்தை நிரப்புதல், சரியா? தவறா?, பொருத்துக, குறுகிய, விரிவாக விடையளித்தல் etc., போன்ற வகையில் வினாக்கள் அமையும். | பெரும்பாலும் பலவுள் தெரிவு வகையிலேயே வினாக்கள் அமையும். ( UPSC Main etc., போன்ற தேர்வுகள், தனியார் துறை தேர்வுகளில் விரிவாக விடையளித்தல் பகுதியும் நேர்முகத்தேர்வுகள் பகுதியும் இருக்கும்). |
| வினாக்களுக்குரிய விடைகளை தாளில் எழுதும்படி அமையும். | வினாக்களுக்குரிய விடைகளை OMR விடைத்தாளில் பென்சில்/ பந்து முனைப் பேனா கொண்டு நிழலிடும் வகையில் அமைந்திருக்கும். (விரிவாக விடையளித்தல், இணையவழி தேர்வுகள், நேர்முகத் தேர்வுகள் தவிர ) |

**பள்ளி அளவிலான திறனாய்வுத் தேர்வுகளுக்கும், பிற போட்டித் தேர்வுகளுக்குமான தொடர்பு :**

திறனாய்வுத் தேர்வுகளில் கேட்கப்படும் வினாக்கள் (மனத்திறன் தேர்வு, படிப்பறிவுத்திறன் போன்ற தேர்வு பகுதிகள்) பெரும்பாலும் TNPSC, SSC, IBPS, RRB, Police Selection, UPSC போன்ற போட்டித்தேர்வுகளிலும் கேட்கப்படுகின்றது.

எண்ணிலடங்கா திறனாய்வுத் தேர்வுகள் பள்ளிகள் அளவில் இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தேசிய வருவாய்வழி மற்றும் உதவித்திட்ட திறன் தேர்வு ( NMMS), ஊரகத்திறனாய்வுத் தேர்வு (TRUST), தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE) போன்ற தேர்வுகளே அதிக முக்கியத்துவம் பெறுகின்றன,

அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் பெரும்பாலும் சமூக, பொருளாதார நிலையில் விளிம்புநிலையில் உள்ளவர்களாகவும், கிராமம், குக்கிராமங்களில் வசிப்பவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு CBSE, ICSE பாடத்திட்டங்களில் படித்த, நகரம், பெருநகரங்களில் பயிலும் பிற மாணாக்கர்களுடன் பொதுவான போட்டித்தேர்வுகளில் போட்டியிடும்போது பெரும் சிரமங்களைச் சந்திக்கின்றனர். இக்குறையைப் போக்க, நமது மாணாக்கர்களை பள்ளி அளவிலே நடைபெறும் போட்டித் தேர்வுகளான திறனாய்வுத் தேர்வுகளில் அனைவரையும் பங்குபெறச்செய்து, போட்டிகள் நிறைந்த இவ்வுலகை எதிர்கொள்ள தயார் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இடைநிலை அளவில் ( Secondary level) மாணாக்கர்களுக்கு நடத்தப்படுகின்ற தேர்வுகளுள் மிகக் கடினமான தேர்வாகவும், உலகத் தரத்தோடு உள்ள தேர்வாகவும் NTSE உள்ளது. இதிலிருந்தே இத்தேர்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம், மேலும் ஒருவர் திறனாய்வுத் தேர்வுகளில் பங்குபெறும்போதும், வெற்றிபெறும் போதும் எழும் உத்வேகமானது எதிர்காலத்தில் தாம் எழுதவுள்ள பல போட்டித்தேர்வுகளை மன தைரியத்துடன் சந்திக்க தூண்டுகோலாய் உள்ளது.

திறனாய்வுத் தேர்வுகளில் வெற்றிபெறும் மாணாக்கர்களுக்கு கிடைக்கப்பெறும் ஊக்கத்தொகையானது, அம்மாணாக்கர்களுக்கு பிற போட்டித் தேர்வுகளின் மீது ஈர்ப்பை ஏற்படுத்துவதோடு, அவர்தம் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியிலும் உதவிகரமாக உள்ளது.

**திறனாய்வுத் தேர்வுகளை எதிர்கொள்ளும் மாணாக்கர்களை தயார்படுத்துதலில் ஆசிரியர்களின் பங்கு :**

திறனாய்வுத் தேர்வுகள், வகுப்புத் தேர்வுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இருப்பதால் திட்டமிடல், முறையான பயிற்சி, வழிகாட்டுதல் அவசியமாக உள்ளது. மேலும், திறனாய்வுத் தேர்வுகளின் முக்கியத்துவத்தை மாணாக்கர்களுக்கு எடுத்துக்கூறி திறனாய்வுத் தேர்வுகளின் மீது ஈர்ப்பை ஏற்படுத்த வேண்டும். மேலும், ஆசிரியர்கள் திறனாய்வுத் தேர்வுகளின் பகுதிகளை நன்கு ஆராய்ந்து ஆறாம் வகுப்பிலிருந்தே குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளிக்க வேண்டும்.

## தேசிய வருவாய்வழி மற்றும் திறனறித்தேர்வு (NMMS)

அறிவார்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கும், தேர்வில் வெற்றி பெற்று சாதனை படைக்கவிருக்கும் மாணவச் செல்வங்களுக்கும், வணக்கம்.

எந்த ஒரு போட்டித் தேர்வு எழுத தயாராகும்போதும், அத்தேர்வினைப் பற்றிய முழு அறிவு அவசியம். எனவே, தேசிய வருவாய்வழி மற்றும் திறனறித் தேர்விற்கு (National Means cum Merit Scholarship Exam) தயாராகும் முன்னர், NMMS தேர்வு எழுதுவதற்கான மாணவருக்கு உரிய தகுதிகள், தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை, தேர்வின் பகுதிகள், தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள், மாணவர்கள் தேர்வு செய்யப்படும் விதம், தேர்வின் மூலம் கிடைக்கும் உதவித்தொகை போன்ற விபரங்களை அறிதல் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

### NMMS தேர்வு எழுதுவதற்கான தகுதிகள் :

- அரசு / அரசு உதவி பெறும் / ஊராட்சி / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுள் ஏழாம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வில் 55% மதிப்பெண்களுக்கு குறையாமல் மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவியர்கள் இத்தேர்வினை எழுதலாம். (SC / ST) மாணவ / மாணவியர்கள் 50% மதிப்பெண்கள் மட்டும் பெற்றிருந்தால் போதுமானது).
- மாணவ / மாணவியரின் பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.1,50,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- தொடர்ந்து பள்ளிக்கு வரும் மாணவ / மாணவியராக (Regular Student) இருக்க வேண்டும்.

### தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :

- பொதுவாக செப்டம்பர் - அக்டோபர் மாதத்தில் தேர்வு பற்றிய அறிவிப்பு வெளிவரும்.
- www.dge.tn.nic.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்படும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்
.
- அரசால் அந்தந்த வருடத்தில் வெளியிடப்படும் புதிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

### தேர்வின் பகுதிகள் :

NMMS தேர்வானது இரு பகுதிகளை (தேர்வுகளை) உள்ளடக்கியதாகும்.

- பகுதி - I (மனத்திறன் தேர்வு)
- பகுதி - II (படிப்பறிவுத் திறன் தேர்வு)

### பகுதி - I ( மனத்திறன் தேர்வு )

- மனத்திறன் தேர்வானது (MAT) மாணவர்களின் பகுத்தாயும் திறன், காரணம் அறியும் திறன், சிந்திக்கும் திறன், முப்பரிமாண வெளியில் காட்சிப்படுத்தி கண்டறியும் திறன் (ability to visualize in space), எண்ணியல் திறன் போன்றவற்றை சோதித்து அறிவதாக அமையும்.
- மனத்திறன் தேர்வில் எண் தொடர்கள், எழுத்து தொடர்கள், ஆங்கில அகராதிப்படி எழுத்துக்களை வரிசைப்படுத்துதல், தனித்த எண்ணை கண்டறிதல், வென் படங்கள், ஒத்த உருவங்கள், கண்ணாடி பிம்பங்கள், குறியிடல், சிந்தனைக் கேள்விகள், கனசதுரம் அமைத்தல்

போன்ற வினாக்கள் கேட்கப்பட்டிருக்கும். அவற்றிற்கு 4 மாற்று விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். வினாவின் பொருத்தமான விடைக்குரிய எண் உள்ள பகுதியை OMR விடைத்தாளில் கருப்பு நிற பந்துமுனைப் பேனாவால் (Black ball point Pen) முழுமையாக வண்ணம் தீட்ட வேண்டும்.

- மனத்திறன் தேர்வில் 90 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- தவறான விடைக்கு எதிர் மதிப்பெண் (Negative Marks ) கிடையாது.
- இத்தேர்விற்கு 90 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.
- இத்தேர்வானது மாணவ, மாணவியர்கள் தங்கள் எதிர்காலத்தில் எழுதவுள்ள பல போட்டித் தேர்வுகளுக்கு (TRUST, NTSE, IBPS, SSC, TNPSC, RRB, UPSC, etc.) அடிப்படையாகவும், தூண்டுகோலாகவும் அமையும் என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை. மேலும், இத்தேர்வின் மூலம் மாணவ, மாணவியரின் விரிசிந்தனை, சிக்கலுக்கு தீர்வு காணும் ஆற்றல், பகுத்தறியும் திறன் மேம்படுவதால் தங்களின் வாழ்வியல் சிக்கல்களுக்கு ஆராய்ந்து தீர்வு காணும் திறமையும் உருவாகின்றது.

**மனத்திறன் தேர்வு ஒரு கடினமான தேர்வு அல்ல. ஆனால் வித்தியாசமான தேர்வு. முறையான பயிற்சி, கடின உழைப்பினால் மனத்திறன் தேர்வை எளிதாக எதிர்கொள்ளலாம்.**

பகுதி - II ( படிப்பறிவுத் திறன் தேர்வு )

- படிப்பறிவுத் திறன் தேர்வானது (SAT) மாணவர்கள் பாடப்பொருளில் பெற்றுள்ள அறிவை சோதித்து அறிவதாக அமையும்.
- இத்தேர்வில் 7 ஆம் வகுப்பு அறிவியல், கணக்கு , சமூக அறிவியல் பாடங்களில் இருந்தும் (மூன்று பருவங்கள்) மற்றும் 8 ஆம் வகுப்பு அறிவியல், கணக்கு மற்றும் சமூக அறிவியல் பாடங்களில் (முதல் இரு பருவங்கள் ) இருந்தும் வினாக்கள் கேட்கப்படும்.
- படிப்பறிவுத் திறன் தேர்வில் 90 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- தவறான விடைக்கு எதிர் மதிப்பெண் (Negative Marks) கிடையாது.
- இத்தேர்விற்கு 90 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

**மதிப்பெண் பங்கீடு :**

| | | |
|---|---|---|
| அறிவியல் | : | 35 மதிப்பெண்கள் |
| கணக்கு | : | 20 மதிப்பெண்கள் |
| சமூக அறிவியல் | : | 35 மதிப்பெண்கள் |
| **மொத்தம்** | : | 90 மதிப்பெண்கள் |

**மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :**

❖ மனத்திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்வு ஆகிய இரண்டும் சேர்ந்த மதிப்பெண்களில் குறைந்தபட்சம் 40% மதிப்பெண்கள் பெறுபவர்கள் தேர்வில் தகுதி பெற்றவர்களாக கருதப்படுவார்கள். SC / ST பிரிவினர் குறைந்தபட்சம் 32% மதிப்பெண்கள் பெற்றால் போதுமானது.

**மாணவ / மாணவியர்கள் பெறும் உதவித்தொகை :**

❖ மனித வள மேம்பாட்டு அமைச்சகம் (MHRD) நாடு முழுவதும் ஆண்டொன்றிற்கு 1,00,000 மாணவ மாணவியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் தலா ரூ.1000 வீதம் (வருடத்திற்கு ரூ.12000) 4 வருடங்களுக்கு ரூ.48000 அளிக்கின்றது.

❖ மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின்படி 6695 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்படும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையானது, ஒவ்வொரு ஆண்டிலும் உள்ள தமிழ்நாட்டின் மக்கள்தொகை மற்றும் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையை பொறுத்து மாறுபடும். தகுதி பெற்ற 6695 மாணவர்கள் மாநில இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின்படி தேர்வு செய்யப்படுவார்கள் (3% மாற்றுத்திறனாளிகள் உட்பட).

**ஊரகத் திறனாய்வுத் தேர்வு**

**TRUST - Tamil Nadu Rural Students Talent Search Examination**

**TRUST தேர்வு எழுதுவதற்கான தகுதிகள் :**

- 8 ஆம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வில் 50 சதவீதம் பெற்று தற்போது 9 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ / மாணவியர்கள் இத்தேர்வினை எழுதலாம்.
- மாணவ / மாணவியர் குடியிருப்புப் பகுதியும், அவர்கள் பயிலும் பள்ளியும் ஊரகப் பகுதியில் அமைந்திருக்க வேண்டும்.
- நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்தேர்வில் கலந்து கொள்ள இயலாது.
- மாணவ / மாணவியரின் பெற்றோர் வருமானம் ரூ.1,00,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :**

- பொதுவாக ஜுன் - ஜுலை மாதத்தில் தேர்வு பற்றிய அறிவிப்பு வெளிவரும். www.dge.tn.nic.in என்ற இணையத் தள முகவரியில் வெளியிடப்படும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- தற்போது தேர்வுக் கட்டணம் ரூ. 5 மற்றும் சேவைக்கட்டணம் ரூ. 10 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. **இத்தேர்வினைப் பொறுத்தவரை விண்ணப்பத்துடன் வருமானச் சான்றிதழை இணைத்து அனுப்ப வேண்டி இருப்பதால், மாணவ / மாணவியர் முன்னரே அச்சான்றிதழை பெற்று கைவசம் வைத்திருப்பது மிக அவசியம்.**
- மேலும் அரசால் அந்தந்த வருடத்தில் வெளியிடப்படும் புதிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**தேர்விற்கான பாடத்திட்டம் :**

- இத்தேர்வில் எட்டாம் வகுப்பில் மூன்று பருவங்களில் இருந்து கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடப்பகுதி, மனத்திறன் பகுதிகளில், வினாக்கள் கேட்கப்படும்.

**மதிப்பெண் பங்கீடு :**

| | | |
|---|---|---|
| கணிதம் | : | 25 |
| அறிவியல் | : | 25 |
| சமூக அறிவியல் | : | 25 |
| மனத் திறன் பகுதி | : | 25 |
| மொத்தம் | : | 100 |

**பாடப் பகுதி பங்கீடு (தோராயமாக) :**

| பாடம் | பிரிவு | மதிப்பெண் |
|---|---|---|
| கணிதம் | | 25 |
| அறிவியல் | இயற்பியல்<br>வேதியியல்<br>தாவரவியல்<br>விலங்கியல் | 6<br>7<br>6<br>6 |
| சமூக அறிவியல் | வரலாறு<br>குடிமையியல்<br>புவியியல் | 10<br>5<br>10 |

**மனத்திறன் பகுதி பங்கீடு (தோராயமாக) :**

| | | | |
|---|---|---|---|
| 1) | எண் தொடரில் விடுபட்ட எண்ணை நிரப்புதல் | : | 5 |
| 2) | எண் / எழுத்து குறியிடல் | : | 5 |
| 3) | படம் மற்றும் எண் தொடர்பு | : | 5 |
| 4) | தனித்த / வேறுபட்ட எழுத்து / வார்த்தைகள் கண்டறிதல் | : | 5 |
| 5) | தனித்த / வேறுபட்ட படம் கண்டறிதல் | : | 5 |
| | மொத்தம் | : | 25 |

- ❖ இத்தேர்வில் 100 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும்.
- ❖ அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ❖ தவறான விடைக்கு எதிர் மதிப்பெண் கிடையாது.
- ❖ இத்தேர்விற்கு 150 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

**மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :**

தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுள் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் 100 பேர் வீதம் (50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள்) தேர்வு செய்யப்படுவர்.

**மாணவ / மாணவியர்கள் பெறும் உதவித் தொகை :**

தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவியர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

## தேசிய திறனாய்வுத் தேர்வு
## (NTSE - National Talent Search Examination)

**நோக்கம் :**

மாணாக்கர்களிடையே பொதிந்துள்ள அறிவாற்றலை வெளிக்கொணரவும், பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும் இத்தேர்வுகள் உயர் நிலைக் கல்வி அளவில் பயிலும் பத்தாம் வகுப்பு மாணாக்கர்களுக்கு ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகின்றது. பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுள் திறன் வாய்ந்த மாணாக்கர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவித் தொகை வழங்கி மேற்படிப்பினைத் தொடர வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**NTSE தேர்வின் நிலைகள் :**

**NTSE** தேர்வானது இரு நிலைகளை உள்ளடக்கியது.

(1) தேசியத் திறனாய்வுத் தேர்வு நிலை - **I (NTSE Stage - I)**

(2) தேசியத் திறனாய்வுத் தேர்வு நிலை - **II (NTSE Stage - II)**

**தேசியத் திறனாய்வுத் தேர்வு நிலை - I : (NTSE Stage - I)**

**தகுதிகள் :**

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில / யூனியன் பிரதேசங்களில், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்தேர்வில் பங்குபெற தகுதியுடையவர்கள் ஆவர்.

**தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :**

- ❖ பொதுவாக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் - செப்டம்பர் மாதத்தில் தேர்வு பற்றிய அறிவிப்பு வெளிவரும்.
- ❖ **www.dge.tn.nic.in** என்ற இணையதள முகவரியில் வெளியிடப்படும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அவற்றில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- ❖ மேலும், அரசால் அந்தந்த வருடத்தில் வெளியிடப்படும் புதிய நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

**தேர்வின் பகுதிகள் :**

(1) பகுதி - **I** (மனத்திறன் தேர்வு)

(2) பகுதி - **II** (படிப்பறிவுத் திறன் தேர்வு)

**பகுதி - I (மனத்திறன் தேர்வு)**

**மனத்திறன் தேர்வு : (MAT)**

- ❖ மனத்திறன் தேர்விற்கென்று, தனித்த பாடத்திட்டம் ஏதும் பின்பற்றப்படுவதில்லை, இத்தேர்விலும், **NMMS - MAT** தேர்வைப் போன்றே மாணவர்களின் பகுத்தாயும் திறன், காரணம் அறியும் திறன், முப்பரிமாண வெளியில் காட்சிப்படுத்தி கண்டறியும் திறன் **(ability to visualize in space),** எண்ணியல் திறன் போன்றவற்றை சோதித்து அறிவதாக அமையும்.
- ❖ **NMMS - MAT** தேர்வைப் போன்றே இத்தேர்விலும் வினாக்கள் அமைந்திருக்கும். ஆனால் வினாக்களின் கடினத் தன்மை சற்று அதிகமாக இருக்கும்.
- ❖ இத்தேர்வில் 100 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு சரியான விடைக்கும் தலா 1 மதிப்பெண் அளிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ❖ இத்தேர்விற்கு 120 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

**பகுதி - II படிப்பறிவுத் திறன் தேர்வு (Scholastic Aptitude Test - SAT)**

- **SAT** தேர்வானது மாணாக்கர்கள் பாடப் பொருளில் பெற்றுள்ள திறன்களை சோதித்து அறியும் வகையில் இருக்கும்.
- இத்தேர்வில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு **STATE,CBSE,ICSE** பாடத் திட்டத்தில் இருந்து அறிவியல் (40), கணக்கு (20), சமூக அறிவியல் (40) பாடங்களில் இருந்து 100 வினாக்கள் கேட்கப்படும்.
- ஒவ்வொரு வினாவிற்கான சரியான விடைக்கும் 1 மதிப்பெண் அளிக்கப்படும்.
- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- இத்தேர்விற்கு 120 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

**மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :**

- இத்தேர்வில் தகுதி பெற பொதுப் பிரிவு மாணவ / மாணவியர்கள் நிலை - **I** ன் ஒவ்வொரு தேர்விலும் (மனத்திறன் தேர்வு , படிப்பறிவுத் திறன் தேர்வு) 40% மதிப்பெண்கள் பெற வேண்டும், **SC / ST** மற்றும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர் 32% மதிப்பெண்களும் பெற்றால் போதுமானது.

**வழங்கப்படும் உதவித் தொகை விபரம் :**

தேசிய திறனாய்வுத் தேர்வு நிலை - **I** என்பது, தேசிய அளவிலான தேசிய திறனாய்வுத் தேர்வு நிலை - **II** ல் பங்கேற்க நடத்தப்பெறும் தகுதித் தேர்வு மட்டுமே என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, **NTSE** நிலை - **I** ல் மட்டும் தகுதி பெறும் மாணவ / மாணவியர்க்கு எவ்வித உதவித் தொகையும் வழங்கப்படுவதில்லை.

**தேசிய திறனாய்வுத் தேர்வு நிலை - II (NTSE - Stage - II)**

**NTSE - நிலை II தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை :**

இத்தேர்விற்கென்று, தேர்வர் தனியே விண்ணப்பிக்கத் தேவையில்லை. மேலும் இத்தேர்விற்கென்று எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

**NTSE - நிலை II தேர்வு எழுதுவதற்கான தகுதிகள் :**

**NTSE -** நிலை - **I** ல் தகுதி பெற்ற மாணவ / மாணவியர்கள் இத்தேர்வு எழுத தகுதி பெற்றவர்களாவர்.

**தேர்வின் பகுதிகள் :**

- **NTSE -** நிலை **II** ஆனது, தேர்வின்அமைப்பைப் பொறுத்தவரையில் **NTSE -** நிலை **I** ஐப் போன்றே மனத்திறன் மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்வு பகுதிகளை உள்ளடக்கியது. வினா அமைப்பும் **NTSE -** நிலை - **I** ஐப் போன்றே அமைந்திருக்கும். மனத்திறன் தேர்வில் 100 வினாக்களும், படிப்பறிவுத் திறன் பகுதியில் 100 வினாக்களும் அமைந்திருக்கும்.

- அகில இந்திய அளவில் நடைபெறும் தேர்வு என்பதால் வினாக்களின் கடினத் தன்மை மிக அதிகமாக இருக்கும்.

- **NTSE - நிலை - II** படிப்பறிவுத் திறன் தேர்வைப் பொறுத்த வரையில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு **STATE,CBSE,ICSE** பாடத் திட்டத்தில் இருந்து வினாக்கள் அமையும் என்பதால், நமது மாணவ / மாணவியர்கள் முன்னரே **CBSE / ICSE** பாடத் திட்டத்தின் படி உள்ள பாடப் பகுதிகளை அறிந்து தங்களை முழுமையாக தயார் செய்து கொள்ள வேண்டும்.

**மாணவ / மாணவியர்கள் தேர்வு செய்யப்படும் விதம் :**

**NTSE** - நிலை - **II** ல் மனத் திறன் தேர்வு மற்றும் படிப்பறிவுத் திறன் தேர்வில் தலா 40% மதிப்பெண் பெற்றும், **SC / ST** மற்றும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர் 32% மதிப்பெண்களும் பெற்றும் உள்ள மாணவர்கள் தகுதி பெற்றவர்களாக கருதப்படுவார்கள். தகுதி பெற்ற மாணவர்களுள் இரு **(MAT + SAT)** தேர்வுகளிலும் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அகில இந்திய அளவில் தகுதி நிர்ணய மதிப்பெண்கள் **(Cut - off)** நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் அம்மதிப்பெண்கள் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 15%, பழங்குடியின பிரிவினருக்கு 7.5%, மாற்றுத் திறனாளிகளுக்கு 4% - ம், எஞ்சிய 74.5% பொதுப்பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.

**வழங்கப்படும் உதவித் தொகை விவரம் :**

தேசிய திறனாய்வுத் தேர்வு - நிலை - **II** ல் மாணவ / மாணவியர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அகில இந்திய அளவில் 1000 மாணவ / மாணவியருக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படும்.

(1) மாதம் ஒன்றிற்கு ரூ. 1250 வீதம் 11 மற்றும் 12 வது வகுப்பு பயிலும் வரை.

(2) மாதம் ஒன்றிற்கு ரூ. 2000 வீதம் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் வரை.

(3) முனைவர் **(Ph.d)** பட்டப்படிப்பிற்கு **UGC** நிர்ணயித்துள்ள விகிதத்தில்.

**திறனாய்வு மற்றும் போட்டித் தேர்வு நூலை எவ்வாறு பயன்படுத்துவது ?**

❖ திறனாய்வு மற்றும் போட்டித் தேர்வு நூலானது மனத்திறன் தேர்வு, மாதிரி வினாத்தாள்கள் மற்றும் விடைப்பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

❖ மனத்திறன் தேர்வு பகுதியில் 38 கூறுகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் பயிற்சி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய விளக்கங்களுடன் கூடிய விடைத்தொகுப்பும் (Answer Key With Explanation) இணைக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் அவற்றைக் கொண்டு தங்களது விடைகளை சரிபார்த்துக் கொள்ள இயலும்.

❖ மாதிரித்தேர்வு பகுதியில் 9 மாதிரி வினாத்தாள்கள் (MAT - பகுதி மட்டும்) கொடுக்கப்பட்டுள்ளது. (6 NMMS, 1 TRUST, 1 NTSE Stage - **I** மற்றும் 1 NTSE Stage - **II** மாதிரி வினாத்தாள்கள்).

❖ இப்பகுதியில் OMR விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றை பயன்படுத்தி விடையளித்து பழக வேண்டும். (குறிப்பு ; மாதிரித்தேர்வு எழுதும்போது, NMMS தேர்வை பொறுத்தவரை 90 நிமிடங்களில் எழுதி முடித்துவிட வேண்டும். TRUST தேர்வை பொறுத்தவரை (MAT - பகுதி மட்டும்) 35 நிமிடங்களில் எழுதி முடித்துவிட வேண்டும். NTSE Stage - 1, மற்றும் NTSE Stage - 2 தேர்வை பொறுத்தவரை (MAT - பகுதிமட்டும்) 120 நிமிடங்களில் எழுதி முடித்து விட வேண்டும்.)

❖ தேர்வு எழுதிய பின்னர் தங்களது விடைகளை சரிபார்த்துக்கொள்ளுங்கள். அவற்றிற்குரிய விடைத்தொகுப்பும் இணைக்கப்பட்டுள்ளது.

❖ திட்டமிடல், முறையான பயிற்சி மற்றும் தன்னம்பிக்கையோடு இத்தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துக்களுடன்...*



**S.மோகன்,** M.Sc.,M.Phil.,B.Ed.,DISM.,
அறிவியல் பட்டதாரி ஆசிரியர்
**N.சசிகலா மோகன்,** M.Sc.,M.Phil.,B.Ed.,
கணித பட்டதாரி ஆசிரியை

# திறனறிவுத் தேர்வு மற்றும் போட்டி தேர்வு

## பகுதி – 1 மனத்திறன் தேர்வு


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | **வினாக்களின் வகை** | |
| 1. | எண் தொடரில் விடுபட்ட எண்ணை நிரப்புதல் | 17-29 |
| 2. | தனித்த / வேறுபட்ட எண்ணைக் கண்டறிதல் | 30 - 33 |
| 3. | தனித்த / வேறுபட்ட ஜோடி எண்ணைக் கண்டறிதல் | 34 - 36 |
| 4. | ஒப்புமை - எண்கள் | 37 - 40 |
| 5. | வடிவியல் உருவங்களை கண்டறிதல் | 41 - 53 |
| 6. | எழுத்து தொடரில் விடுபட்ட எழுத்தை நிரப்புதல் | 54 - 59 |
| 7. | தனித்த / வேறுபட்ட எழுத்தைத் தேர்ந்தெடுத்தல் | 60 - 65 |
| 8. | ஆங்கில அகராதி வரிசைப்படி வார்த்தைகளை வரிசைப்படுத்துதல் | 66 |
| 9. | வார்த்தைக்குள் அமைந்துள்ள வார்த்தை | 67- 68 |
| 10. | வார்த்தைக்குள் அமையாத வார்த்தை | 69 - 70 |
| 11. | படங்களில் காணும் எண்களுக்கிடையேயான தொடர்பு | 71 - 94 |
| 12. | வென் படங்கள் | 95 - 102 |
| 13. | எண் அணிகள் | 103 - 106 |
| 14. | எண்கள், குறியீடுகள் மற்றும் குறிகள் | 107 - 112 |
| 15. | எண் தொடரில் உள்ள தவறான எண்ணைக் கண்டறிதல் | 113 - 115 |
| 16. | படம் மற்றும் எழுத்து தொடர்பு | 116 - 118 |
| 17. | செருகப்பட்ட படங்கள் - எண் விபரங்கள் | 119 - 123 |
| 18. | செருகப்பட்ட படங்கள் - எழுத்து விபரங்கள் | 124 - 125 |
| 19. | எண்ணியல் கணக்குகள் | 126 - 134 |
| 20. | சிந்தனைக் கேள்விகள் - காலம் சார்ந்தவை | 135 - 142 |
| 21. | சிந்தனைக் கேள்விகள் - திசை சார்ந்தவை | 143 - 149 |
| 22. | சிந்தனைக் கேள்விகள் - உறவுமுறை சார்ந்தவை | 150 - 156 |

## திறனறிவுத் தேர்வு மற்றும் போட்டி தேர்வு

### பகுதி – 1 மனத்திறன் தேர்வு

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 23. | சிந்தனைக் கேள்விகள் -புதிர் கணக்குகள் சார்ந்தவை | 157 - 164 |
| 24. | சூழ்நிலைக் கணக்குகள் | 165 - 179 |
| 25. | ஒப்புமை - எழுத்துகள் / வார்த்தைகள் | 180 - 184 |
| 26. | எண் / எழுத்து குறியிடல் | 185 - 190 |
| 27. | குறியிடல் மற்றும் குறியீட்டின் பொருள் அறிதல் | 191 - 201 |
| 28. | வார்த்தைகளை பொருள்பட வரிசைப்படுத்துதல் | 202 - 203 |
| 29. | உருவ / பட வரிசையை நிரப்புதல் | 204 - 217 |
| 30. | ஒப்புமை - படங்கள் | 218 - 224 |
| 31. | கண்ணாடி பிம்பங்கள் | 225 - 230 |
| 32. | நீர் பிம்பங்கள் | 231 -236 |
| 33. | முழுமையாக மேற்பொருந்தும் உருவங்கள் | 237 |
| 34. | படத்தில் உள்ள விடுபட்ட பகுதியை பூர்த்தி செய்தல் | 238 -244 |
| 35. | மறைந்திருக்கும் / பொதிந்துள்ள உருவங்களைக் கண்டறிதல் | 245 - 247 |
| 36. | தனித்த / வேறுபட்ட உருவத்தை கண்டறிதல் | 248 - 254 |
| 37. | பகடை - எதிரில் அமையும் எண்கள் / குறியீடுகள் / படங்களைக் கண்டறிதல் | 255 - 261 |
| 38. | கன சதுரம் - எதிரெதிர் முகங்களை கண்டறிதல் | 262 - 268 |
| | **மாதிரி தேர்வுகள்** | |
| 39. | மாதிரி தேர்வு - I & II(NMMS) | 270 - 285 |
| 40. | மாதிரி தேர்வு - III & IV(NMMS) | 286 - 302 |
| 41. | மாதிரி தேர்வு - V & VI(NMMS) | 303 - 321 |
| 42. | மாதிரி தேர்வு - I (TRUST) | 322 - 323 |
| 43. | மாதிரி தேர்வு - I (NTSE Stage -1) | 324 - 333 |
| 44. | மாதிரி தேர்வு - I (NTSE Stage -2) | 334 - 345 |

## திறனறிவுத் தேர்வு மற்றும் போட்டி தேர்வு

### பகுதி – 1 மனத்திறன் தேர்வு


| வ. எண் | பொருளடக்கம் | வினா எண் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | **விடைப்பகுதி** | | |
| 1. | எண் தொடரில் விடுபட்ட எண்ணை நிரப்புதல் | | 347 - 367 |
| 2. | தனித்த / வேறுபட்ட எண்ணைக் கண்டறிதல் | | 368 - 372 |
| 3. | தனித்த / வேறுபட்ட ஜோடி எண்ணைக் கண்டறிதல் | | 373 - 379 |
| 4. | ஒப்புமை - எண்கள் | | 380 - 385 |
| 5. | வடிவியல் உருவங்களை கண்டறிதல் | | 386 - 402 |
| 6. | எழுத்து தொடரில் விடுபட்ட எழுத்தை நிரப்புதல் | | 403 - 405 |
| 7. | தனித்த / வேறுபட்ட எழுத்தைத் தேர்ந்தெடுத்தல் | | 406 - 414 |
| 8. | ஆங்கில அகராதி வரிசைப்படி வார்த்தைகளை வரிசைப்படுத்துதல் | | 415 - 416 |
| 9. | வார்த்தைக்குள் அமைந்துள்ள வார்த்தை | | 417-419 |
| 10. | வார்த்தைக்குள் அமையாத வார்த்தை | | 420 -422 |
| 11. | படங்களில் காணும் எண்களுக்கிடையேயான தொடர்பு | | 423 - 443 |
| 12. | வென் படங்கள் | | 444 - 452 |
| 13. | எண் அணிகள் | | 453 - 455 |
| 14. | எண்கள், குறியீடுகள் மற்றும் குறிகள் | | 456 - 466 |
| 15. | எண் தொடரில் உள்ள தவறான எண்ணைக் கண்டறிதல் | | 467 - 471 |
| 16. | படம் மற்றும் எழுத்து தொடர்பு | | 472 - 478 |
| 17. | செருகப்பட்ட படங்கள் - எண் விபரங்கள் | | 479 - 486 |
| 18. | செருகப்பட்ட படங்கள் - எழுத்து விபரங்கள் | | 487 - 490 |
| 19. | எண்ணியல் கணக்குகள் | | 491 - 503 |
| 20. | சிந்தனைக் கேள்விகள் - காலம் சார்ந்தவை | | 504 - 509 |
| 21. | சிந்தனைக் கேள்விகள் - திசை சார்ந்தவை | | 510 - 525 |
| 22. | சிந்தனைக் கேள்விகள் - உறவுமுறை சார்ந்தவை | | 526 - 532 |

## திறனறிவுத் தேர்வு மற்றும் போட்டி தேர்வு

### பகுதி – 1 மனத்திறன் தேர்வு



| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 23. | சிந்தனைக் கேள்விகள் -புதிர் கணக்குகள் சார்ந்தவை | 533 - 547 |
| 24. | சூழ்நிலைக் கணக்குகள் | 548 - 555 |
| 25. | ஒப்புமை - எழுத்துகள் / வார்த்தைகள் | 556 - 563 |
| 26. | எண் / எழுத்து குறியிடல் | 564 - 571 |
| 27. | குறியிடல் மற்றும் குறியீட்டின் பொருள் அறிதல் | 572 - 591 |
| 28. | வார்த்தைகளை பொருள்பட வரிசைப்படுத்துதல் | 592 |
| 29. | உருவ / பட வரிசையை நிரப்புதல் | 593 |
| 30. | ஒப்புமை - படங்கள் | 593 |
| 31. | கண்ணாடி பிம்பங்கள் | 593 |
| 32. | நீர் பிம்பங்கள் | 593 |
| 33. | முழுமையாக மேற்பொருந்தும் உருவங்கள் | 594 |
| 34. | படத்தில் உள்ள விடுபட்ட பகுதியை பூர்த்தி செய்தல் | 594 |
| 35. | மறைந்திருக்கும் / பொதிந்துள்ள உருவங்களைக் கண்டறிதல் | 594 |
| 36. | தனித்த / வேறுபட்ட உருவத்தைக் கண்டறிதல் | 594 |
| 37. | பகடை - எதிரில் அமையும் எண்கள் / குறியீடுகள் / படங்களைக் கண்டறிதல் | 595 - 600 |
| 38. | கன சதுரம் - எதிரெதிர் முகங்களை கண்டறிதல் | 601 - 607 |
| 39. | மாதிரி தேர்வு - I & II (NMMS) | 608 |
| 40. | மாதிரி தேர்வு - III & IV (NMMS) | 609 |
| 41. | மாதிரி தேர்வு - V & VI (NMMS) | 610 |
| 42. | மாதிரி தேர்வு - I (TRUST) | 611 |
| 43. | மாதிரி தேர்வு - I (NTSE Stage -1) | 611 |
| 44. | மாதிரி தேர்வு - I (NTSE Stage -2) | 611 |
| 45. | OMR மாதிரி தாள்கள் | 612 - 615 |